திருப்பத்தூர் மிக, மிக பின்தங்கிய பகுதி. வேலூர் மாவட்டத்தைப் பிரித்து எங்கள் பகுதியைப் புதிய மாவட்டம் ஆக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அவசர முக்கியத்துவம் வாய்ந்தது இல்லை.

(ஒ) ஊத்தங்கரை வட்டம், காட்டு யானையால் தாக்கப்பட்டவருக்கு நிதியுதவி மற்றும் பயிர்ச் சேத இழப்பீடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 18 ஆம் தேதி, எனது ஊத்தங்கரை தாலுகா அருகே யானை மிதித்து ஒரு வனக் காப்பாளர் இறந்து விட்டார். உடனடியாக அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை அனுப்பி வைத்து, ஈமச்சடங்கு உள்ளிட்ட பல்வேறு விஷயங்களுக்கு உடனே உதவி புரிந்ததற்கு மாவட்டத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறக்குறைய ஒரு வாரகாலமாக, இன்றுவரையிலும், 300, 400 ஏக்கரில் பயிர் சேதமாகி இருக்கின்றது. யானையினுடைய துதிக்கையால் தாக்கப்பட்டு, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற ஒருவருக்கு இன்னும் எந்தவிதமான உதவியும் அளிக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய பயிர்களுக்கு உரிய நஷ்ட ஈடுவழங்குவதற்கும், அதேபோல், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு உதவி செய்வதற்கும் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

(ஒ) முகையூர் தொகுதி, மனம்பூண்டியில் மாற்றுப் பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.*

2009 ஜூலை 21]

முற்பகல் 10–10

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முகையூர் தொகுதிக்கு உட்பட்ட மனம்பூண்டி அருகிலே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கின்ற இரும்புப் பாலம் இன்னும் ஒரு வாரத்திலோ, இரண்டு வாரத்திலோ கண்டிப்பாக விழுந்துவிடும் நிலையில் இருக்கின்றது. அது விழுந்துவிட்டால் விழுப்புரம்–திருவண்ணாமலையிடையே சாலைப் போக்குவரத்து கண்டிப்பாகப் பாதிக்கப்படும். எனவே, உடனடியாக அந்த இரும்புப் பாலத்தை மாற்றி, புதிய பாலம் அமைத்துத் தர அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். மணி. (குறுக்கீடு) மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டுவதற்கு அரசு கடந்த நிதியாண்டில் அனுமதி தந்திருக்கிறது. அதேபோல, அதற்குப் பக்கத்திலே ஏற்கெனவே ஒரு தரைப்பாலம் இருந்தது. அந்தப் பாலம் கடந்த ஆண்டு வெள்ளத்திலே பாதிக்கப்பட்டதனால் அந்தப் பாலத்திற்கு மராமத்துப் பணி செய்து, அதற்குப் பிறகு அந்தப் பாலத்தை எடுத்துவிட்டு புதிய பாலம் கட்டுவதாக அரசு செயற்குறிப்பிலே இருக்கிறது. எனவே, அதை இந்த நிதியாண்டிலே வேகப்படுத்தி அந்தப் பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஔ) பொங்கலூர் தொகுதி, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க உப்பாறு அணைக்குத் தண்ணீர் திறந்து விடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். மணி.

திரு. எஸ். மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொங்கலூர் தொகுதிக்கு உட்பட்ட உப்பாறு அணையில் வறட்சியால் நீர் வரண்டுபோய் அந்தப் பகுதி விவசாயிகள் மற்றும் கால்நடைகளுக்கு லாரிகள் மூலமாகக் குடிதண்ணீர் கொண்டுவந்து விநியோகிக்கப்படுகிறது. ஒவ்வொரு தடவையும் P.A.P. பாசனத் தண்ணீரை *4* நாட்களுக்கு விட்டால் அந்த அணை நிரம்பிவிடும்.